பக்கங்கள்:-23

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | சித்திரை 21 | சனிக்கிழமை | 04.05.2024 | அதிர்வு 277

## கோர விபத்தில் ஆசிரியர் சாவு!

வாகன விபத்தில் ஆசிரியர் ஒருவர் பலியாகியுள்ளார்.

மோட்டார் சைக்கிளும் காரும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. 06

# தென்னிலங்கையைச் சேர்ந்த பாதாளக் குழு உறுப்பினர்கள் இருவர் இந்தியாவில் கைது!

(ந.லோகதயாளன்)

தென்னிலங்கையைச் சேர்ந்த பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் இருவர் நேற்று அதிகாலை இந்தியாவின் சிவகங்கையில் தமிழகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையில் இருந்து சட்டவிரோதமாகப்பயணித்துதமிழகம்சிவகங்கையில் மறைந்திருந்த வேளை சென்னையில் உள்ள ஒருவர் மூலம் இந்தியாவின் குடியுரிமை ஆவணங்களைப் போலியாகத் தயாரிக்க முயன்ற சமயமே கியூப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இரு தென்னிலங்கையரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் விமானம் மூலமாகவும், மற்றையவர் படகு மூலமாகவும் இலங்கையில் இருந்து பயணித்து ஒரே இடத்தில் ஒன்று சேர்ந்து மறைந்திருந்தனர் 06



# இரு விவாதங்களுக்கும் இந்த மாதம் நாம் தயார்!

## நாட்டுக்குச் சேவைகள் செய்யவும் நாம் தயார் என்று தேசிய மக்கள் சக்திக்குச் சஜித் சவால்

**“பொருளாதாரக் குழுக்களுக்கிடையிலான விவாதத்தை நடத்த தேசிய மக்கள் சக்தி தயங்குவது போல் தெரிகின்றது. ஆனால், ஐக்கிய மக்கள் சக்தி குழுவாக இரண்டு விவாதங்களுக்கும் தயாராக உள்ளது. இந்த இரண்டு விவாதங்களுக்கும் இந்த மே மாதத்திலேயே திகதிகளை ஒதுக்கிக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.”**

**- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.** 06



# பெருந்தோட்டத் தொழிலாளர்களை கவனிக்க முடியாவிடின் வெளியேறுக

## கம்பனிகளிடம் அமைச்சர் மனுஷ வலியுறுத்து



பெருந்தோட்டத் தொழிலாளர்களைப் பெருந்தோட்ட நிறுவனங்களால் கவனிக்க முடியாவிட்டால் இயலுமானவர்களிடம் தோட்டங்களை ஒப்படைத்துவிட்டுச் செல்லுமாறு தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார வலியுறுத்தியுள்ளார்.

முல்லைத்தீவில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின் 06



சேர்மானங்கள் தொடர்பில் இரண்டு உதாரணங்கள் வழமையாகக் கூறப்படுவதுண்டு.

நல்ல சேர்மானம் என்றால் ‘பூவோடு சேர்ந்த நாரும் மணக்கும்...!’ என்பார்கள்.

கெட்ட சகவாசம் என்றால் ‘பன்றியுடன் சேர்ந்த கன்றும்.....’ என்று சொல்லுவார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சேர்மானமும் இப்படி இரண்டு முரண்பட்ட ரகங்களில் இருக்கின்றமை சர்வதேச குறிகாட்டிகள் மூலம் அம்பலமாகியிருப்பது கவனிக்கத்தக்கது.

ராஜபக்ஷக்களின் இருண்ட யுக ஆட்சியில் – யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது – இலங்கையில் ஊடக சுதந்திரம் மிக மோசமான கட்டத்தில் இருந்தது. 06



# கல்வி சாரா ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்பால் பல்கலைக்கழக செயற்பாடுகள் நேற்று ஸ்தம்பிதம்

கல்வி சாரா ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்பினால் அனைத்து பல்கலைக்கழகங்களின் நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டன.

பல்கலைக்கழகங்களில் நடைபெறவுள்ள அனைத்துப் பரீட்சைகளும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன எனப் பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்கள் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக செயற்பாடுகள் முற்றாக ஸ்தம்பித்த மைக்கு அரசாங்கம் மற்றும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் பொறுப்பேற்க வேண்டுமென நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

கல்விசாரா ஊழியர்கள் ஆரம்பித்த தொடர் பணிப்பகிஷ் கரிப்பு இரண்டாவது நாளாக நேற்று இடம்பெற்றது.

சம்பளத்தில் 15 வீதம் குறைக்கப்பட்டமை, மாதாந்தக் கொடுப்பனவு அதிகரிக்கப்படாமை, சம்பளப் பிரச்சினை உள்ளிட்ட பிரச்சினைகளை முன்வைத்து போராட்டத்தினை முன்னெடுத்துள்ளனர்.

இதன் காரணமாக அனைத்து பல்கலைக்கழகங்களின் செயற்பாடுகளும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

# ஐக்கிய அரபு அமீரகச் சிறைகளில் உள்ள 44 இலங்கையர்களுக்கு பொதுமன்னிப்பு



ஐக்கிய அரபு அமீரகம் முழுவதும் வெவ்வேறு சிறைகளில் தண்டனை அனுபவித்து வந்த 44 இலங்கையர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாக அபுதாபியில் உள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ரமழான் மாதத்தை முன்னிட்டு அரச உத்தரவுக்கமைய இவ்வாறு பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாக ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தின் வெளிவிவகார அமைச்சு அபுதாபியில் உள்ள இலங்கைத் தூதரகத்திற்கு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, பொது மன்னிப்பு பெற்ற இந்த 44 இலங்கையர்களும் உரிய காலத்திற்குள் ஐக்கிய அரபு இராச்சிய அரசால் மீண்டும் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளனர்.

அபுதாபியில் உள்ள இலங்கைத் தூதரகம், ஐக்கிய அரபு அமீரகம், அரசாங்க அதிகாரிகள் மற்றும் இலங்கையின் வெளிவிவகார அமைச்சுடன் இணைந்து அவர்களை பாதுகாப்பாக நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்குமென தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், இந்த இலங்கையர்களுக்கு மன்னிப்பு வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டமைக்காக ஐக்கிய அரபு இராச்சிய அரசாங்கம், அதன் வெளிவிவகார மற்றும் உள்துறை அமைச்சுகளுக்கு அபுதாபியில் உள்ள இலங்கைத் தூதுவர் பாராட்டுகளை தெரிவித்துள்ளார்.

# சுகவீன விடுமுறையினை அறிவித்து கிராம சேவையாளர்கள் போராட்டம்




இருநாள் சுகவீன விடுமுறையை அறிவித்து கிராம உத்தியோகத்தர்கள் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

சம்பளப் பற்றாக்குறை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அவர்கள் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என அகில இலங்கை கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தலைவர் நந்தன ரணசிங்க அறிவித்துள்ளார்.

எதிர்வரும் திங்கள் மற்றும் செவ்வாய் கிழமைகளில் அவர்கள் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இம்மாத இறுதி வாரங்களில் மரக்கறி விலை அதிகரிக்கும்



இம்மாதத்தின் இறுதி வாரங்களில் கடும் மழை பெய்யும் பட்சத்தில் மரக்கறிகளின் விலை அதிகரிக்கக் கூடும் என ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம் குறிப்பிட்டுள்ளது.

இந்த வருட இறுதி வரை மரக்கறிகளின் விலை அதிகரிக்காது எனவும் ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், எதிர்காலத்தில் அரிசியின் விலை அதிகரிக்கக் கூடும் எனவும் எதிர்வுகூறப்பட்டுள்ளது.

இதன்படி கீரி சம்பா மற்றும் சம்பா போன்றவற்றின் விலை அதிகரிக்கக் கூடும் என ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம் குறிப்பிட்டுள்ளது.

# கொத்து, ப்ரைட்ரைஸ் விலைகள் குறைந்தன



கொத்து, ப்ரைட்ரைஸ் மற்றும் சோற்றுப்பொதி ஆகியவற்றின் விலைகள் 20 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளன என உணவக மற்றும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன், சிற்றுண்டிகளின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாகவும் அந்த சங்கத்தின் தலைவர் ஹர்சன ருக்ஷான் தெரிவித்துள்ளார்.

எரிவாயுவின் விலை குறைக்கப்பட்டுள்ளமையைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், தேநீர் மற்றும் பால் தேநீர் என்பவற்றின் விலைகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவில்லை எனவும் உணவக மற்றும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

QUIS UT DEUS
ST. MICHAEL'S COLLEGE BATTICALOA

## பழைய மாணவர்கள் சங்க வருடாந்த பொதுக் கூட்டம்

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் வைகாசி மாதம் 4ம் திகதி (04-May-2024) கொழும்பு புனித மேரி தேவாலயத்தில் மாலை 6.00 மணிக்கு பூசையும் அதனைத் தொடர்ந்து கொழும்பு Marino Beach ஹோட்டலில் (கொள்ளுப்பிட்டி) வருடாந்த பொதுக் கூட்டமும், இரவு விருந்து உபசாரமும் இடம்பெறும்.

பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.



## பேராசிரியர் சு.வித்தியானந்தன் நூற்றாண்டு விழா

காலம் : 11.05.2024, 12.05.2024
இடம் : யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி



# காசா சிறுவர் நிதியத்திற்கு 33 லட்சம் ரூபா அன்பளிப்பு

காசா சிறுவர் நிதியத்திற்கு மாவனல்லை சாஹிரா கல்லூரி 33 லட்சம் ரூபாவை அன்பளிப்புச் செய்துள்ளது. அதற்கான காசோலை நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளரும் ஜனாதி பதி நிதியத்தின் செயலாளருமான சரத் குமார மற்றும் மாவனல்லை சாஹிரா கல்லூரியின் அதிபர் ஏ.எச்.எம். நவூஷாட், ஆசிரியர் குழாம் சார்பில் எஸ்.எம்.நவாஸ், எம்.எஸ்.எம். நலீம், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் செயலாளர் ரிலாப் மொஹமட், பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் எல். மொஹமட் ரிப்கான், எம்,எஸ்.எம். நிலார்தீன் உள்ளிட்டவர்களும் இதன்போது கலந்துகொண்டிருந்தனர்.

# தோட்டத் தொழிலாளர் சம்பள அதிகரிப்பு விவகாரத்தில் அரசாங்கத்தின் தீர்மானங்களை கம்பனிகள் மீற முடியாது

## நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவிப்பு



“பெருந்தோட்டத் தொழிலாளர் சம்பள அதிகரிப்பு விவகாரத்தில் அரசாங்கத்தின் தீர்மானங்களை பெருந்தோட்டக் கம்பனிகள் மீறி நடக்க முடியாது. பிரச்சினையை பேசித் தீர்மானிப்பதாக கம்பனிகள் கூறுகின்ற போதிலும் அவ்வாறு அந்தக் கம்பனிகள் செயற்படவில்லை.”

– இவ்வாறு இலங்கைத் தேசிய தோட்ட தொழிலாளர் சங்கச் செயலாளரும் பெருந்தோட்ட விவகாரங்கள் தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“பல சுற்றுகளாக இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் பின்னர் பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருக்கிறது.

ஆனால் இது தொடர்பாக சம்பள நிர்ணய சபையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளில் பங்கெடுப்பதை முதலாளிமார் சம்மேளனம் தொடர்ச்சியாக புறக்கணித்து வந்தது. இது சம்பள விவகாரத்தில் தொழிலாளர்களை ஏமாற்றும் முயற்சியாகவே எமக்கு தெரிகிறது.

அதனால் தொழில் ஆணையாளரின் அதிகாரத்தைப் பயன்படுத்தி சட்டபூர்வமாக 1,700 ரூபாய் சம்பள அதிகரிப்புக்கான வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது. 1,000 ரூபாய் சம்பள அதிகரிப்பு கோரிய போதும் முதலாளிமார் சம்மேளனம் இதுபோன்ற இழுத்தடிப்புக்களையே செய்திருந்தது.

அதற்காக அவர்கள் வெட்கித் தலைகுனிய வேண்டும். டொலர் பெறுமதி அதிகரித்தால் தோட்டப் கம்பனிகள் அவர்களுக்கு கிடைத்த இலாபத்தின் நிவாரணங்களை தொழிலாளர்களுக்கு வழங்காமல் தற்போது இழுத்தடிப்புச் செய்வது நியாயமற்றது.

இவ்வாறு கம்பனிகள் அரசாங்கத்தின் தீர்மானங்களை மீறி நடக்க முடியாது. அதற்கான அதிகாரம் கம்பனிகளுக்கு இல்லை. இப்போது உயர்மட்ட குழுவுடன் பேசித் தீர்மானிப்பதாக பெருந்தோட்ட கம்பனிகன் கூறுகின்றன. மொத்தமாகவுள்ள 22 பெருந்தோட்ட கம்பனிகளுக்கும் ஐவர் மாத்திரமே சொந்தக்காரர்களாக உள்ளனர். இவர்கள் தேயிலை துறை மாத்திரமின்றி சுற்றுலா, சிறுபோக உற்பத்தி பயிர்கள், மாணிக்க கல் அகழ்வு தொழில் துறைகளிலும் வலுவாகச் செயற்படுகிறார்கள்.

அதேநேரம் சம்பள விவகாரத்தில் இழுத்தடிப்புச் செய்யும் கம்பனிகள் 20 கிலோ கொழுந்து நாளாந்தம் பறிக்கப்பட வேண்டியது அவசியம் என்ற நிபந்தனையை விதிக்கின்றன. ஆனால், ஊழியர்கள் அச்சமின்றி தொழிலுக்குச் செல்லும் வகையில் கம்பெனிகள் தோட்டங்களைப் பராமரிப்பதில்லை.

எவ்வாறாயினும் பேச்சுவார்த்தையாக மாத்திரமே இருந்து வந்த சம்பள விவகாரத்தை வர்த்தமானியில் அறிவித்தமைக்கு ஜனாதிபதிக்கும் தொழில் அமைச்சருக்கும் நன்றி கூற வேண்டியது அவசியம்.

அதேபோல், இந்த விடயத்தில் தோட்ட தொழிலாளர்களும் தொழிற்சங்கங்களும் ஒற்றுமையாக இருந்து சம்பள அதிகரிப்பைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும்.”

– என்றார்.

# ரெலோ தலைவர் சிறிசபாரத்தினத்தின் நினைவு தின நிகழ்வு மட்டக்களப்பில்!

(பழுவூரான்)

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் அமரர் சுந்தரம் சிறிசபாரத்தினத்தின் 38 ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வு கட்சியின் செயலாளரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் தலைமையில் மட்டக்களப்பிலுள்ள கட்சியின் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

அன்னாரது நினைவு தினத்தை முன்னிட்டு அவரின் திருவுருவப் படத்திற்கு முன்னால் நினைவுச்சுடர் ஏற்றி, மலரஞ்சலி செலுத்தப்பட்டதன் பின் மௌன அஞ்சலியும் இடம் பெற்றது.

இந்நிகழ்விற்கு முன்னாள் மாகாண சபை உறுப்பினர் இந்திரகுமார் பிரசன்னா உட்பட கட்சியின் உயர்மட்ட பிரதிநிதிகள், ஆதரவாளர்கள், தொண்டர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். கட்சியின் உயர்மட்ட உறுப்பினர்களால் நினைவுப் பேருரையும் நிகழ்த்தப்பட்டது.













# புத்தளத்தில் இரண்டரை மாத சிசுவை கிணற்றில் வீசிக் கொன்ற தாய் கைது

புத்தளம் – கல்பிட்டி, கண்டக்குடா பகுதியில் தாய் தனது இரண்டரை மாத சிசுவை கிணற்றில் வீசி கொலை செய்துள்ளார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கண்டக்குடா பகுதியில் வீடு ஒன்றுக்கு அருகில் இருந்த கிணற்றிலிருந்து சிசுவின் சடலம் நேற்று முன்தினம் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் தாழையடி பகுதியை சேர்ந்த சிசுவின் 32 வயது தாய் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுகவீனமுற்றிருந்த குழந்தையையும் தன்னையும் கணவர் கவனிக்காத நிலையில், சிசுவின் தாய் மனரீதியாக பாதிக்கப்பட்டிருந்துள்ளார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.



இந்தச்சம்பவம்தொடர்பில்கல்பிட்டிபொலிஸார்மேலதிகவிசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கை தொடர்பான சர்வதேசக் குறிகாட்டி 170 ஐத் தொட்டிருந்தது. 180 நாடுகளில் மிக மோசமான நிலைமையைக் கொண்டிருந்த கடைசிப் பத்துப் பதினைந்து நாடுகளில் இலங்கையும் அடங்கியிருந்தது.

ரணில் விக்கிரமசிங்க 2015 இல் பிரதமராக வந்த போது – ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன போன்றவர்களுடன் இணைந்து நல்லாட்சி அரசை அமைத்த போது – இலங்கை நிலைமை திடீரென மேம்பட்டு 24 இடங்கள் ஒரேடியாக மேலேறியது. 136 ஆவது இடத்துக்கு அது உயர்ந்தது. அது பூவோடு சேர்ந்த நாரின் நிலைமை.

திரும்பவும் ஆட்சி மாற நிலைமைகளும் மாறின. இலங்கையின் ஊடக சுதந்திர நிலைமை தொடர்ந்து கெடத் தொடங்கியது. இப்போது ராஜபக்ஷக்களோடு சேர்ந்து ரணில் விக்கிரமசிங்கவின் அதிகாரக் காட்டுத் தர்பார் தொடர்கின்றது.

அதனால் இந்த ஆண்டில் இலங்கையின் நிலைமை திடீரென 15 இடங்கள் கீழே விழுந்து, அது 150 ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டிருக்கின்றது. ராஜபக்ஷக்களுடன்சேர்ந்துஅவர்களதுபாணியை ரணில் கைக்கொள்ளத் தொடங்கியமையாலேயே இந்த நிலைமை. அது பன்றியுடன் சேர்ந்த கன்றின் சுபாவம் போன்றது தான்.

வரும் ஜனாதிபதித் தேர்தலிலும் ராஜபக்ஷக்களுடன் சேர்ந்து ரணில் மக்கள் முன் வருவாராயின் கடைசியில் பன்றியின் இடம்தான் அவருக்குக் கிடைக்கும்...!

## கோர விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குருநாகல், வாரியப்பொல பிரதேசத்தில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் 34 வயதுடைய உயிரியல் பாட ஆசிரியரே உயிரிழந்துள்ளார். இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தை ஆவார்.

வாரியப்பொல பாடசாலையொன்றில் கடமைகளை முடித்துவிட்டு மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்த ஆசிரியரே விபத்தில் சிக்கியுள்ளார்.

காரின் சாரதியைக் கைது செய்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பெருந்தோட்டத் தொழி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

“பெருந்தோட்ட நிறுவனங்களுக்குச் சம்பளம் தொடர்பில் கருத்துக்களை முன்வைக்க 15 நாட்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளன. எனவே, பேச்சு நடத்த முன்வருமாறு அழைப்பு விடுக்கின்றோம்.

அவ்வாறு முடியாவிட்டால், தோட்ட மக்களைக் கவனிக்க முடியாவிட்டால் இயலுமானவர்களிடம் ஒப்படைத்துவிட்டு அவர்களால் செல்ல முடியும்.” – என்றும் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார மேலும் தெரிவித்துள்ளார்.

## தென்னிலங்கையைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எனக் கூறப்படும் அதேநேரம் இருவர் வசமும் கடவுச்சீட்டுகள் கைவசம் இருக்கின்றன எனவும் கூறப்படுகின்றது.

இதேநேரம் படகு மூலம் சட்டவிரோதமாகப் பயணித்தவரின் கடவுச்சீட்டிலும் இந்தியா பயணிப்பதற்கான நுழைவு விசா பெறப்பட்டுள்ளபோதும் படகில் பயணித்தமை தமிழகப் பொலிஸாருக்குப் பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கைது செய்யப்பட்ட இலங்கையர் இருவரும், அவர்கள் இந்தியாவின் குடியுரிமைக்கான போலி ஆவணம் பெற உதவிய இந்தியர் ஒருவரும் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் இன்று முற்படுத்தப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## இரு விவாதங்களுக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 170ஆவது கட்டமாக 10 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் கம்பஹா, மீரிகம, கல்எலிய அலிகார் தேசிய பாடசாலைக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான உண்மையான மற்றும் யதார்த்தமான தரவுகளை மையமாகக் கொண்ட பொருளாதாரப் பார்வை மற்றும் திட்டத்தைக் கொண்ட குழு ஐக்கிய மக்கள் சக்தியிடமே உள்ளது. வாய்ப் பேச்சு மட்டுமுள்ள தலைவரிடம் வாய்ப்பேச்சு மட்டுமே உள்ள குழுவும், ஐக்கிய மக்கள் சக்தியிடம் சொன்னதைச் செய்யும், செய்வதைச் சொல்லும் குழுவும் இருப்பதால், இந்த இரண்டு விவாதங்களும் இந்த மே மாதம் நடத்தப்பட வேண்டும். அதுமட்டுமல்லாது, நாட்டுக்காகப் பணியாற்ற முன்வருமாறும் தேசிய மக்கள் சக்திக்கு அழைப்பு விடுகின்றோம்.

இன்று சர்வதேச ஊடகவியலாளர் தினம். நாம் ஊடக சுதந்திரத்துக்காக முன்நிற்க வேண்டும். ஊடக சுதந்திரம் இருக்கும் ஒரு நாட்டில் மக்களுக்கு ஜனநாயக உரிமைகளும், தகவல்களை அறிந்துகொள்ளும் உரிமையும் ஊடக சுதந்திரத்தில் உறுதி செய்யப்பட்டுள்ளதால் ஊடக சுதந்திரத்துக்காக நிபந்தனையின்றி முன்நிற்கின்றோம்.

ஊடக சுதந்திரத்தில், மக்களுக்கு உண்மைத் தகவல்களைத் தெரிவிப்பதும், ஆதாரத்துடன் தகவல்களை முன்வைப்பதும் பொறுப்புடன் நிறைவேற்றப்பட வேண்டும். மக்களின் மனச்சாட்சியை நன்கு அறிந்த, படித்த, புத்திசாலித்தனமான ஊடகத்துறையினர், நாட்டுக்கு உண்மைத் தகவல்களை, உண்மை நிலையைத் தெரிவிக்கும் கடமையை நிறைவேற்றுவார்கள் என நம்பப்படுகின்றது. இந்த ஊடக சுதந்திரத்துக்கு ஒருபோதும் பாதிப்பு ஏற்படக்கூடாது.

மே தினம் காரணமாக பிரபஞ்சம் வேலைத்திட்டங்களுக்குச் சிறிது இடைவெளி எடுக்க வேண்டி ஏற்பட்டாலும், நாம் இந்தப் பணிகளை மீண்டும் ஆரம்பித்து விட்டோம். எந்தவொரு எதிர்க்கட்சித் தலைவரும் இவ்வாறான சேவையைச் செய்ததில்லை.” – என்றார்.











# வடமேல் மாகாண ஆளுநர் நசீர் அஹமட் கடமைகளை நேற்றுப் பொறுப்பேற்றார்

வடமேல் மாகாண புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட் தனது கடமைகளை நேற்றுப் பொறுப்பேற்றார்.

வடமேல் மாகாணத்தின் புதிய ஆளுநராக நசீர் அஹமட் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் நேற்று முன்தினம் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

இந்த நிலையில், வடமேல் மாகாண ஆளுநர் அலுவலகத்தில் அவர் கடமைகளை நேற்றுப் பொறுப்பேற்றார்.

### சஜித் அணியின் மே தினக் கூட்டத்தில்

# பொன்சேகா உரையாற்ற ஏன் இடமளிக்கப்படவில்லை?



மே தினக் கூட்டத்தில் உரையாற்றுவதற்கு இடமளிக்கும் வகையில் கட்சிக்குரிய பங்களிப்பை நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா வழங்கி இருக்கவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டத்தில் பொன்சேகா பங்கேற்றாலும் அவருக்கு உரையாற்ற இடமளிக்கப்படவில்லை. கட்சியின் தவிசாளராக அவரே தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றார்.

இந்நிலையில், பொன்சேகாவுக்கு ஏன் உரையாற்ற இடமளிக்கப்படவில்லை என ஊடகங்களால் எழுப்பப்பட்ட கேள்விக்கு,

"அவர் கட்சியை விமர்சித்து வருகின்றார், மே தினக் கூட்ட ஏற்பாட்டுக்குப் பங்களிப்பும் வழங்கவில்லை. எனவே, அவருக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை. கட்சி கட்டமைப்புக்கமைய அவர் செயற்படவில்லை. அவருக்க உரையாற்ற வாய்ப்பு வழங்குவது ஏற்புடைய நடவடிக்கையும் அல்ல." – என்று சுஜீவ சேனசிங்க பதிலளித்தார்.

# நானுஓயாவில் நேற்று ஓட்டோ திடீரெனத் தீப் பற்றி எரிந்தது!

நுவரெலியா – ஹட்டன் பிரதான வீதியில் நானுஓயா தபால் நிலையத்திற்கு முன்பாக நேற்றுப் பிற்பகல் ஓட்டோ ஒன்று திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது.

நோட்டன் பிரிட்ஜ் பகுதியில் இருந்து நுவரெலியா நோக்கிப் பயணித்த ஓட்டோவே இவ்வாறு தீப்பற்றி எரிந்துள்ளது.

ஓட்டோவை வீதியோரத்தில் நிறுத்தி விட்டு அருகில் உள்ள வர்த்தக நிலையத்தில் பொருள்களைக் கொள்வனவு செய்த நபர் மீண்டும் ஓட்டோவை இயக்க முற்பட்டபோது அது தீப்பற்றியுள்ளது.

இந்த விபத்தில் உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை. ஓட்டோ முற்றாகத் தீக்கிரையாகியுள்ளது.

இந்த நிலையில், தீப்பரவலுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனவும் இயந்திரப் பகுதியில் எரிபொருள் கசிவு ஏற்பட்டிருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.



சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மீண்டும் தொடங்கும் மிடுக்காக வேலைநிறுத்தப் போராட்டங்கள்

பொருளாதார நெருக்கடிகளில் இருந்து - பின்னடைவுகளில் இருந்து - நாடு மீண்டெழுந்து வருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அவரது அரச சகாக்களும் என்ன பிரசாரத்தை முன்னெடுத்தாலும், உண்மையில் நிலைமை யாது என்பது நாட்டு மக்களுக்குப் புரியாதது அல்ல.

கடன் மீளளிக்க வக்கற்ற நாடு என்ற கடைகெட்ட நிலையில் இருந்து நாடு இன்னும் மீளவே இல்லை. சர்வதேச கடன் கடப்பாடுகளை - கடன் தவணைக் கொடுப்பனவுகளை - இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் செலுத்தாமல் நிறுத்திய இலங்கை, இன்னும் அதை மீளச் செலுத்தத் தொடங்கவே இல்லை. பழையபடி கடன் தவணைக் கொடுப்பனவுகளை செலுத்தத் தொடங்கினால் கஜானா மீண்டும் காலிதான். அந்நிய செலாவணிக்கையிருப்பு மீண்டும்காணாமல் போய்விடும்.

கடன் கடப்பாடுகளை நிறைவு செய்யாமல், நாடு அன்றாடம் காய்ச்சி நிலையில் ஓடிக் கொண்டிருக்கின்றது. அவ்வளவுதான். ரணிலின் அரசு படம் காட்டுவது போல, அப்படி ஒன்றும் பெரிய பொருளாதார மேம்பாடு எட்டப்படவே இல்லை, எட்டப்படும் சாத்தியமும் கிட்ட இருப்பதாகவும் தெரியவில்லை.

ஏதோ கஷ்டத்தில் இருக்கும் நாடு மேம்பட்டும் என்று பொறுத்திருந்த - சகித்திருந்த - அரச ஊழியர்கள் மீண்டும் கொதிநிலைக்கு வந்து விட்டனர்.

அரசாங்கத்துக்கு எதிரான அதிருப்தி நிலைமை ஆங்காங்கே ஊழியர்களின் போராட்டங்கள், வேலை நிறுத்தங்கள் என்று மெல்ல மெல்ல மீண்டும் தலை எடுக்கத் தொடங்கிவிட்டது.

தேர்தல் காலம் நெருங்க, நெருங்க நிலைமை இன்னும் தீவிரமாகும் - மோசமாகும் - என்று எதிர்பார்க்கலாம்.

பல்கலைக்கழகங்களில் கல்வி சாரா ஊழியர்களின் வேலைநிறுத்தத்தினால் கடந்த வியாழன் மதியம் முதல் பல்கலைக் கழகங்கள் செயலிழந்துள்ளன.

நாடு முழுவதும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சுகவீனப் போராட்டத்தில் குதித்துத் தமது எதிர்ப்பைக் காட்டியுள்ளனர்.

பொறியியல், சுகாதாரம், கல்வி, விவசாயம் போன்ற பல துறைகளையும் சேர்ந்த அரச உயர் அதிகாரிகளின் சங்கத்தின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் நடத்திய ஒரு நாள் விடுமுறைப் போராட்டம் இனித் தொடரப் போகின்ற கூட்டுத் தொழிற்சங்க போராட்டங்களுக்கான அபாய முன்னெச்சரிக்கை அறிவிப்புத்தான்.

கிராம சேவை அலுவலர்களும் இரண்டு நாள்கள் சுகவீனப் போராட்டத்தை திங்கள், செவ்வாயில் முன்னெடுக்கப் போகின்றனர்.

ஏற்கனவே மருத்துவ - சுகாதார ஊழியர்களின் வேலை நிறுத்த போராட்ட முஸ்தீபும், கல்வித் துறையினரின் தொழிற்சங்க நடவடிக்கை எச்சரிக்கையும் நீறு பூத்த நெருப்பாகக் கனன்று கொண்டிருக்கின்றன.

எந்நேரத்திலும் அவையும் பற்றிப் பிடித்து, விளாசி, முளாசி எரியத் தொடங்கலாம்.

வழக்கமாகவே ஜனாதிபதி பதவியில் இருப்பவர் மீண்டும் ஜனாதிபதியாவது உறுதியாகாத நிலையில், அவரின் பதவிக் காலத்தின் அந்தத்தில், அதிகாரப்பிடி தளர்வது வழமைதான்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நிலைமையும் அதுவே. இன்னும் தேர்தலுக்கு ஐந்து மாதங்கள்தான். ஆயினும் இன்னும் கூட, தாம் அடுத்த தேர்தலில் போட்டியிடுவாரா என்பதை வெளிப்பட அறிவிக்க முடியாத பின்னடைவு நிலையிலேயே அவர் இருக்கின்றார் என்பது தெளிவாகி வருகின்றது.

அத்தகைய சூழ்நிலையில், தற்போதைய பதவியின் அந்தத்தில், அவரின் அதிகாரப்பிடி தளரத் தொடங்குவது எதிர்பார்க்கத் தக்கதே.

அத்தகைய தளர்வு நிலை ஏற்பட ஏற்பட, மறுபுறத்தில் அரச தொழில்துறையின் கோரிக்கைகளுக்கான தொழிற்சங்கப் போராட்டங்கள், வேலை நிறுத்த நடவடிக்கைகள் போன்றவையும் தீவிரமடையும் என்பது பொதுவான நிலைமைதான்.

அப்படிப் பார்த்தால் தேர்தல் நெருங்க, நெருங்க தொழிற்சங்க போராட்டங்கள், வேலைநிறுத்தங்கள், ஆர்ப்பாட்டங்கள் தீவிரமடைவது தவிர்க்க முடியாதது என்றே தோன்றுகின்றது.

# இந்தியாவில் வெப்பத்தின் தாக்கம் மேலும் அதிகரித்தது; 9 பேர் பலி

இந்தியாவின் சில பகுதிகளில் வெப்பத்தின் தாக்கம் அதிகரித்ததமையால் இதுவரை 9 பேர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கேரளா, ஆந்திரா, பீகார், ஒடிசா உள்ளிட்ட பல்வேறு பாகங்களில் உள்ள இந்தியார்கள் இவ்வாறாக உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகரிக்கும் வெப்பத்தால் எதிர்வரும் நாள்களில் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடு மெனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல், மே மற்றும் ஜ/ன் மாதங்களில் இந்தியாவின் தென்பகுதி, மத்திய இந்தியா, கிழக்கு இந்தியா, வட மேற்கு இந்தியாவின் சமவெளிப் பகுதிகளில் வழக்கத்தை விட அதிகமான வெப்ப அலை வீசும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

இதன்படி, ஏப்ரல் மாதத்தில் இந்தியாவின் கிழக்குப் பகுதியில் சராசரி வெப்பநிலை 28.12 செல்சியஸ் ஆக பதிவாகியுள்ளது.

இந்தியாவில் 1901 ஆம் ஆண்டுக்கு பிறகு தற்போது அதிக வெப்பம் பதிவாகியுள்ளதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.



தமிழ்நாட்டில் கரூர், பரமத்தி, ஈரோடு, திருச்சி, வேலூர், தர்மபுரி உள்ளிட்ட பகுதிகளில் வெப்ப அலை வீசி உள்ள தாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், எதிர்வரும் நாள்களில் வெப்ப அலை படிப்படியாக குறையும் என கணிக்கப்பட்டுள்ளது.

# இந்தியாவின் மற்றுமொரு ஏவுகணை சோதனை வெற்றி

டார்பிடோ எனும் ஏவுகணை அமைப்பை இந்திய இராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் வெற்றிகரமாக பரிசோதித் துள்ளதாக தெரிவித்துள்ளது.

இந்திய இராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் டி.ஆர்.டி.ஓ இந்திய படையினருக்கு தேவையான ஏவுகணைகளை தயாரித்து வருகின்றது. அவை பல்வேறு கட்ட சோதனைகளுக்கு பிறகு படைக்கட்டமைப்பில் சேர்க்கப்படுகின்றன.

இந்த நிலையில் டார்பிடோ என்கிற ஏவுகணை அமைப்பை இந்திய இராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் நேற்று முன்தினம் வெற்றிகரமாக பரிசோதித்தது.

ஒடிசா கடற்கரையில் உள்ள டொக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் தீவில் இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டது.

சூப்பர்சோனிக் ஏவுகணையின் உதவியுடன் ஸ்மார்ட் ஏவுகணை அமைப்பு பரிசோதிக்கப்பட்டதாகவும், இந்த சோதனையில் ஏவு கணை அமைப்பின் வேகக் கட்டுப்பாடு உள்பட பல அதிநவீன வழிமுறைகள் சரிபார்க்கப்பட்டன என்றும் இந்திய இராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.



# தனி விமானம் மூலம் மதுரையில் இருந்து சென்னை புறப்பட்டார் முதல்வர் ஸ்டாலின்



குடும்பத்துடன் கொடைக்கானலில் ஓய்வு எடுக்கச் சென்றி ருந்த முதல்வர் ஸ்டாலின் மதுரை விமான நிலையத்தில் இருந்து நேற்று தனி விமானம் மூலம் சென்னை புறப்பட்டுச் சென்றார்.

தமிழகத்தில் நடந்து முடிந்த மக்களவை தேர்தலுக்கு பிறகு தமிழக முதல்வர் முக.ஸ்டாலின் கொடைக் கான லில் குடும்பத்தினருடன் தங்கி ஓய்வெடுக்க முடிவெடுத்தார். இதற்காக அவர் கடந்த 29 ஆம் திகதி சென்னையில் இருந்து புறப்பட்டு தனி விமானம் மதுரை விமான நிலை யம் சென்றார். இதன்பின்னர், கார் மூலம் கொடைக்கானல் சென்று குடும்பத்தினருடன் ஓய்வெடுத்தார்.

இந்த நிலையில், அவரது பயணத்திட்டபடி, நேற்று சென்னைக்கு திரும்புவார் என்று கூறப்பட்டிருந்தது. அதன் படி கொடைக்கானலில் இருந்து புறப்பட்டு நேற்று இரவு மதுரை விமான நிலையம் சென்றடைந்தார். சுமார். 7.10 மணிக்கு தனி விமானம் மூலம் சென்னைக்கு புறப்பட்டுச் சென்றார். இது தனிப்பட்ட பயணம் என்பதால் அமைச்சர்கள், கட்சி நிர்வாகிகள் மற்றும் அதிகாரிகள் யாரும் முதல்வரை சந்திக்க விமான நிலையம் வரவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

# சந்திரனின் தொலைதூர பகுதியிலிருந்து மாதிரிகளைச் சேகரிப்பதற்கு சீனா ஆய்வு





சந்திரனின் தொலைதூர பகுதியில் இருந்து மாதிரிகளைச் சேகரிப்பதற்கான ஆய்வு ஒன்றை சீனா ஆரம்பித்துள்ளது.

இதற்கமைய, அண்டவெளி கோள் ஆராய்ச்சியில் சந்திரனின் அடுத்த தொலைதூர பகுதியில் ஆய்வுகளை ஆரம்பிக்கும் முதலாவது நாடாக சீனா காணப்படுகிறது.

வென்சாங் விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் இருந்து ஆளில்லா ஏவுகணை நேற்று ஏவப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

53 நாள்கள் பயணிக்கும் இந்த விண்கலம் இரண்டு கிலோகிராம் நிறையை கொண்ட சந்திரனின் மாதிரிகளை பூமிக்கு கொண்டுவர சீன விஞ்ஞானிகள் திட்டமிட்டுள்ளனர்.

பூமியில் இருந்து பார்க்க முடியாத சந்திரனின் இருண்ட பகுதி என விபரிக்கப்படும் பகுதி அதிக பள்ளங்களை கொண்டது என குறிப்பிடப்பட்டுள்ளது.

சந்திரன் எவ்வாறு உருவானது என்பதை வெளிப்படுத்தக்கூடிய பொருள்கள் இந்த பகுதியில் இருப்பதற்கான சாத்தியங்கள் உள்ளன என விஞ்ஞானிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

விண்கலத்தை ஏவுவதற்கு முன்னர், சீனாவின் சந்திர ஆய்வு மற்றும் விண்வெளி பொறியியல் மையத்தின் பிரதி இயக்குனர் ஜீ பிங் செய்தியாளர்களிற்கு பல புதிய தகவல்களை வழங்கினார்.

சேஞ்ச் – 6 என பெயர் இடப்பட்ட இந்த விண்கலம், முதன் முறையாக சந்திரனின் வெகு தொலைவில் உள்ள மாதிரிகளை சேகரிக்கும் என தெரிவித்துள்ளார்.

சீன விஞ்ஞானிகள் எதிர்காலத்தில் சந்திரன், மற்றும் செவ்வாய் கிரகங்களுக்கு அப்பாலும் ஆய்வுகளை நடத்த திட்டமிட்டுள்ளனர்.

விண்கலம் சந்திரனின் தென் துருவ ஐட்கன் பகுதியில் தரையிறங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பிடப்பட்ட இந்த பகுதி 2,500 கிலோ மீற்றர் அகலத்தையும் 8 கிலோ மீற்றர் ஆழத்தையும் கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானில் பள்ளத்தாக்கில் பயணிகள் பஸ் கவிழ்ந்து விபத்து



## 20 பேர் உயிரிழப்பு

பாகிஸ்தானின் வடமேற்கு பகுதியில் பயணிகளை ஏற்றிச் சென்ற பஸ் விபத்துக்குள்ளாகியதில் 20 பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், நேற்று காலை இடம்பெற்ற இந்த விபத்தில் 21 பேர் காயமடைந்துள்ளனர் என தெரிவித்துள்ளனர்.

ராவல்பிண்டியில் இருந்து கில்கிட் நோக்கி சென்ற பஸ் கில்கிட்–பால்டிஸ்தான் பகுதியில் காரகோரம் நெடுஞ்சாலையில் கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தாக்கில் விழுந்து நொருங்கியுள்ளது.

இதனையடுத்து, தகவலறிந்த பொலிஸார் மற்றும் மீட்புக்குழுவினர் விரைந்து மீட்பு பணிகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்த விபத்தில் சிக்கி உயிரிழந்த 10 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. அவை பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், இந்த பஸ் விபத்தில் காயமடைந்த 21 பேர் வைத்திய சாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். மீட்பு பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது.




**1. உரலார் கேள்வி :-என்ன? தமிழ்ப் பேச்சாளரா கிய நீங்கள், அரசியல் கேள்விகளுக்கே அதிகம் பதில் தருகிறீர்கள். ஏன் தமிழ் பற்றி ஒன்றுமே பேசுவதில்லை?**

**உலக்கையார் பதில் :-** தமிழ் பற்றி என்னத்தைப் பேச? தமிழ்த் தாய்க்கு இப்போது காலம் சரியாய் இல்லை என்று தெரிகிறது. எங்கு பார்த்தாலும் ஏதோ வகையில் அவள் இடர்ப்பட்டுத்தான் நிற் கிறாள். ஒன்று, மொழி வகையில் அவளைத் தாழச் செய்கிறார்கள் அல்லது இன வகையில் அவளைத் தாழச் செய்கிறார்கள்.

மற்றவர்களால் அவள் படும் இன்னல்களை விடத் தன் புதல்வர்களால் அவள் படும் இன்னல்களே அதிகமாய் இருக்கின்றது. எல்லோரும் அவளை வைத்து வாழ நினைக்கிறார்கள். அவளுக்காய் வாழ நினைப்போர் தொகை நாளாந்தம் அருகிக் கொண்டே போகிறது.

தமிழின் தாயகமான தமிழகத்தில் இருக்கும் தலைவர்கள், தமிழ்த் தாயைத் தமது அரசியல் லாபத்திற்காக மட்டுமே பயன்படுத்தி வருகிறார்கள். பல ஆண்டுகளாக அங்கு அதுதான் நடக்கின்றது. தமிழ்மொழி, தமிழ் இனம், தமிழ் நாடு என்றெல்லாம் பேசி வருவோர், தமிழைக் கொண்டு வந்து விட்டி ருக்கும் இடம் பெரும் கவலைக்குரியதாய் இருக்கிறது.

தமிழைத் தமிழ் என்று சரியான முறையில் உச்சரிக்கக்கூட அங்குள்ள பலபேருக்குத் தெரிய வில்லை. அவர்களில் பலர் கொஞ்சம் கூடக் கூச்ச மில்லாமல் தமிழைத் 'தமில்' என்று உச்சரிக்கிறார்கள். தமது தாய் மொழியின் பெயரைக் கூடச் சரியான முறையில் சொல்லத் தெரியாத அளவில்தான், இன்று பெரும்பான்மையான தமிழகம் பயணித்துக் கொண்டிருக்கிறது.

படிப்பறிவில்லாப் பாமர மக்களிடம் இக் குறைபாட்டினைக் கண்டால் அதனை மன்னித்து விடலாம். ஆனால் அப்படி இல்லாமல் அரசியல் வாதிகள், ஊடகக்காரர்கள், மேடைப் பேச்சாளர்கள் என மொழியைப் பரப்பிவரும் பலரது நிலையும் மேற்சொன்னவாறு இருப்பதுதான் கவலையைத் தருகிறது.

அங்குள்ள ஊடகக்காரர்கள் சிறிதும் கவலை இன்றிச் சென்னைக்குள் வெள்ளம் புகுந்து விட்டது என்பதனை சென்னைக்குள் 'வெல்லம்' புகுந்து விட்டது என, வெட்கம் இல்லாமல் பேசி வேடிக்கை செய்கிறார்கள். சென்னைக்குள் வெல்லம் புகுந்தால் நல்லது தானே என்கிறார்கள் விடயம் தெரிந்தவர்கள்.

ஒரு காலத்தில் இலங்கை வானொலியில் ஓர் அறிவிப்பாளரைத் தேர்ந்தெடுக்கும் போது அவர்களின் உச்சரிப்புக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்தை நினைத்துப் பார்க்க வேண்டி இருக்கிறது.

அங்கு புதிய அரசியல்வாதிகள், புதிய பேச்சா ளர்கள் எனப் பலரது நிலையும் இதுவாகத்தான் இருக்கிறது. தமிழைப் பிரச்சாரம் செய்து வரும் மேற் சொன்ன பகுதியினரே, தமிழைப் பிழையாகப் பேசப்பேச, அந்தப் பிழைதான் சரியான தமிழென நினைந்து புதிய தலைமுறை இளையோரும் அப்படியே பேசப் பழகி வருவது கொடுமையிலும் கொடுமை.

வருங்காலத்தில் அங்கு தமிழை, தமிழ் எனச் சரியாக உச்சரிப்பவர்களுக்கு, 'சூப்பர் சிங்கர்' பாடகர்களுக்கு அறுபது இலட்சம் பெறுமதியான வீடு கொடுப்பதுபோல் கொடுக்க வேண்டி வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

நல்லகாலம் இந்த விடயத்தில் எங்கள் நாடு எவ்வளவோ முன்னேறி இருக்கிறது. நம் தமிழாசிரியர்கள் செய்த புண்ணியத்தால், ஒவ்வொரு தமிழ் அட்சரங்களுக்குமான உச்சரிப்பை மிகச்சரியாக வெளிபடுத்துவோர் தொகை இங்கு அதிகமாகவே இருக்கிறது. மொழிப்பயன்பாட்டில் குறைபாட்டுடன் இருந்த மலையகத் தமிழர்களும், இஸ்லாமியர்களும் கூட இன்று தமிழைச் செம் மையாய்ப் பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறார்கள்.

தமிழ்த் தாயின் நிலைமை நம் நாட்டில் எப்படி இருக்கிறது என்றால் மொழிப்பற்றை பொய்மை கலந்த வெறும் இனப்பற்றாய்க் காட்டுவதிலேயே இங்கு பலரது காலம் கழிந்து கொண்டிருக்கிறது. தனித்து தாய் மொழியைப் போற்றுவார் தொகை பூச்சியத்தை அண்மித்துக் கொண்டிருக்கிறது. தமிழ் மொழியின் பண்பாட்டு வேர்களை எல்லாம் அறுத்தெறிந்துவிட்டு, அதன்மேல் மேற்கு நாட்டு வெளிச்சம் பாய்ச்சி, நவீன தமிழ் என அதற்குப் பெயர் சூட்டி, ஒரு சில கற்றவர்கள் செய்து வரும் அநியாயத்தை இங்கு கேட்பார் எவருமில்லை.

இந்தப் பிழையான பாதையைத் தொடக்கி வைத்த பெருமை (?) நம் பல்கலைக்கழகத்தாரையே சார்ந்து நிற்கிறது. நம்மினத்தின் சாபமோ என்னவோ, மற்ற விடயங்களைப் போலவே இந்த விடயத்திலும் பிழையானவர்களின் கரங்கள்தான் பலம்பெற்று நிற்கின்றன. மரபு வழிவந்து அங்கு நுழைந்த ஒரு சிலர் கூட முன்னவர் பாதையில் நடப்பதையே தமக்கான பலமாய்க் கருதி வருகின்றனர். அனைத்தும் கலியின் வேலை.

தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளிலோ, தமிழ்த்தாய் இன்றைக்கோ நாளைக்கோ எனச் 'சேடம்' இழுத்துக் கொண்டிருக்கின்றாள். அங்கு

**தொடர்ச்சி▼**

தொடர்ச்சி▲

சென்ற நம் பெற்றோருக்குப் பிறந்த பிள்ளைகளில் பலருக்கும் ஆங்கில மொழியே தாய் மொழியாகவும், தமிழ் மொழி அந்நிய மொழியாகவும் தான் இருக்கிறது.

இங்கிருந்து சென்று அங்கு வாழும் ஒரு சில மொழிப் பற்றாளர்கள், தமிழ்ப் பாடசாலை என்றும், தமிழ்க் கலைவிழாக்கள் என்றும், தமிழ் நிகழ்ச்சிகள் என்றும் 'சேடம் இழுக்கும்' தமிழ்த்தாயின் மூச்சை 'இழுத்துப் பிடிக்க' தம்மால் முடிந்தளவு முயன்று கொண்டிருக்கிறார்கள். நான் வழமையாகச் சொல்வது போல, இத்தகையவர்களின் காலத்திற்குப் பின்னால், அங்கு பெரும்பாலும் தமிழ்த் தாய்க்குச் 'சமாதி' கட்டப்பட்டுவிடும் என்றே கருதுகின்றேன்.

மொத்தத்தில் தமிழ்த்தாயின் நிலை இப்படி எங்கும் சீரழிந்து கொண்டிருக்கையில் தமிழைப் பற்றி நான் என்னத்தைச் சொல்ல? விட்டுத்தள்ளுங்கள்.

**சல்லடையார் சலிப்பு :- 'விதியே விதியே தமிழச் சாதியை என்செயக் கருதி இருக்கிறாயடா?'**

✦✦✦✦✦✦✦✦✦✦

**2. உரலார் கேள்வி :- வரப்போகின்ற ஜனாதிபதித் தேர்தலில், எல்லாத் தமிழ்க் கட்சிகளும் இணைந்து ஓர் பொது வேட்பாளரை நிறுத்துவது பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?**

**உலக்கையார் பதில் :-**வேண்டாத வேலை என்றே படுகிறது. ஒரு கட்சிக்குள் இணைந்து ஒருமைப்பட முடியமால் நிற்கும் இவர்கள், தமிழ் இனத்தை ஒன்றுபடுத்திக் காட்ட நினைப்பது நல்ல வேடிக்கை.

தமிழ் மக்கள் அனைவரும் தமது உரிமைக்காக ஒருமித்து நிற்கிறார்கள் என்பதை உலகுக்குக் காட்ட இது ஒரு நல்ல சந்தர்ப்பமாய் அமையும் என்கிறார்கள் சிலர். நோக்கம் நல்லதுதான், ஆனால் 'கரணம் தப்பினால் மரணம்' என்றாற் போல சில வேளை இந்த முயற்சியே நம் நோக்கத்திற்கு எதிராக மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

முதலில் நம் தமிழ்க் கட்சிகள், உரிமை விடயத்திலாவது ஒன்றுபட்டு நிற்கின்றனவா என்பதே கேள்விக்குரிய ஒன்றாகத்தான் இருக்கிறது.

வடக்கில் டக்ளஸ் தேவானந்தா, அங்கஜன் இராமநாதன், விஜயகலா மகேஸ்வரன் என்போர் எல்லாம் இக் கொள்கைக்கு உடன்படப் போவதில்லை. இவர்களுக்குப் பின்னால் தனித்தனியே கணிசமான அளவு வாக்காளர் தொகை இருப்பதையும் மறுப்பதற்கில்லை. இவை தவிர, போருக்குப் பின்னால் தலையெடுத்திருக்கும், சாதியை முன்னிறுத்தி அரசியல் நடத்தும் அருண் சித்தார்த் அவர்களின் கட்சியைப் போன்ற ஓரிரண்டு கட்சிகள் கூட இக் கொள்கையை மறுத்து நிற்கும் என்பது சர்வ நிச்சயம்.

கிழக்கில் பிள்ளையான், வியாழேந்திரன் இந் நோக்கத்திற்கு நிச்சயம் முட்டுக்கட்டை போடுவார்கள். இவர்களுக்கு எல்லாம் மக்கள் வாக்களிக்க மாட்டார்கள் என்று சொல்வதற்கும் இடம் இல்லை. சென்ற முறை ஜெயிலில் இருந்தபடியே அதிகூடிய வாக்குகளைப்பெற்ற பிள்ளையானையும், யாழில் அதிக வாக்குகள் பெற்ற அங்கஜனையும் நாம் அவ்வளவு சீக்கிரத்தில் மறந்துவிட முடியாது. நம்மினத்தைப் பொறுத்தவரை தலைவர்கள் மட்டுமல்லாமல் பெரும்பான்மை மக்களும் சந்தர்ப்பவாதிகளாகவே இருக்கிறார்கள்.

இந்நிலையில் தேவையில்லாமல் 'விஷப்பரீட்சை' செய்யப் புறப்பட்டு 'தடி கொடுத்து அடி வாங்குவதை விடப் பேசாமல் வெல்லக்கூடிய ஓர் பேரின அணிக்கு ஆதரவு தெரிவித்து நம்மினத்தைப் பலப்படுத்துவதே உகந்தது என நினைக்கின்றேன்.

பொது வேட்பாளர் கருத்தை முன் வைத்துக் கொண்டிருக்கும் பலரும் கூட, இன நன்மைக்காய் அன்றி தமது நன்மைக்காகவே அக்கருத்தை முன்வைத்துக் கொண்டிருப்பதாகவே படுகிறது.

**சல்லடையார் சலிப்பு :-**
**' என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்?'**

✦✦✦✦✦✦✦✦✦✦

**3. உரலார் கேள்வி :-ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக முன்னாள் முதலமைச்சர் முயன்று வருவதாய்ப் படுகிறதே? வந்தால் என்ன?**

**உலக்கையார் பதில் :-** என்ன? என் வாயைக் கிளறப் பார்க்கிறீர்களா? முதலமைச்சராகி அதைப் பயன்படுத்திக் குழப்பங்கள் செய்து, நாடாளுமன்ற உறுப்பினராகிய பின்பும் ஆசை அடங்காது விட்டால் அதற்கு என்ன செய்வது?

என்னைக் கேட்டால் பொது வேட்பாளராக ஒருவரை நிறுத்த வேண்டும் என்று முடிவு செய்தால்,



அதற்கு எந்தத் தலைவரும் தேவையில்லை. முகம் தெரியாத ஒரு தமிழ் மகனே போதும் என்பேன். ஒற்றுமையைக் காட்டுவது என்று வந்து விட்டால், அதற்கு வெறுமனே ஒரு கைத்தடியை நிறுத்தினால் கூடப் போதும் என்று நினைக்கின்றேன். அதுவொன்றால்தான் நாம் ஒற்றுமையாக இருக்கின்றோம் என்று அர்த்தமாகும்.

அதை விட்டுவிட்டு எவர் எவருக்கோ கைத்தடியாக மாறக்கூடியவர்களை எல்லாம் பொது வேட்பாளராய் நிறுத்தி மீண்டும் ஒரு தரம் தமிழ் இனம் 'மூக்கு உடைபடக் கூடாது' என்பதே எனது கருத்து.

**சல்லடையார் சலிப்பு :- ஆரிட்ட என்னத்தைக் கேட்கிறதெண்டு இல்லையே பாருங்கோ, ஹீ.....ஹீ......!**

✦✦✦✦✦✦✦✦✦✦

**4. உரலார் கேள்வி :- தங்களது கோவிட் தடுப்பூசியால் ஆபத்து விளைய வாய்ப்பு இருக்கிறது என்று அஸ்ரா செனிக்கா நிறுவனம் ஏற்றுக் கொண்டுள்ளதைப் பார்த்தீர்களா?**

**உலக்கையார் பதில் :-**துலைவான்கள்! மனிசர நிம்மதியா இருக்க விட மாட்டாங்கள் போல...........

**சல்லடையார் சலிப்பு :-**
**'காயமே இது பொய்யடா வெறும் காற்றடைத்த பையடா.........'**

✦✦✦✦✦✦✦✦✦✦



# இலங்கை - சீனா இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை விரைவுபடுத்த நடவடிக்கை

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடனை மறுசீரமைப்பதற்கும் பொருளாதார சவால்களை எதிர்கொள்வதற்கும் இலங்கையின் தற்போதைய முயற்சிகளுக்கு தொடர்ந்து ஆதரவு வழங்கப்படும் என சீனா மீண்டும் உறுதியளித்துள்ளது.

இலங்கைக்கான சீனத் தூதுவர் சி சென்ஹொங் – பிரதமர் தினேஷ் குணவர்தன இடையில் நேற்று முன்தினம் அலரி மாளிகையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

பிரதமரின் சீனாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தின் போது, இரு நாடுகளுக்கும் இடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களை விரைவாக நடைமுறைப் படுத்துவது குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்துவது இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பின் புதிய அத்தியாயத்தை ஆரம்பிக்கும் என பிரதமர் இதன்போது தெரிவித்துள்ளார்.

இதற்கு மேலதிகமாக, பொருளாதார பிரச்சினைகளுக்கு நீண்ட கால தீர்வாக சீனாவிடமிருந்து நேரடி தனியார் முதலீடையும், விவசாயம், மீள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, தகவல் தொழில்நுட்பம், கல்வி மற்றும் நீர் வழங்கல் துறைகளில் புதிய முதலீடுகளையும் இலங்கை எதிர்பார்ப்பதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

கடினமான நிலைமைகளை வெற்றி கொள்வதற்கு இலங்கை மேற்கொண்டு வரும் முயற்சிகள் குறித்து தாம் மகிழ்ச்சியடைகின்றார்கள் என்றும் சீனத் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

கடனை மறுசீரமைப்பதற்கும் பொருளாதார சவால்களை எதிர்கொள்வதற்கும் இலங்கையின் தற்போதைய முயற்சிகளுக்கும் சீனா தொடர்ந்து ஆதரவளிக்கும் எனவும் அவர் உறுதியளித்துள்ளார்.

# ஆள்பதிவு அலுவலகங்களை இன்று திறப்பதற்கு ஏற்பாடு




கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஆள்பதிவுத் திணைக்கள அலுவலகங்கள் இன்று சனிக்கிழமையும் திறக்கப்படும் என ஆள்பதிவு ஆணையாளர் நாயகம் பிரதீப் சபுதந்தி தெரிவித்துள்ளார்.

இம்முறை கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள விண்ணப்பதாரர்களில் சிலர் இதுவரை தமது தேசிய அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்ளவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

சில பரீட்சார்த்திகள் தேசிய அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பங்களை இதுவரை சமர்ப்பிக்கவில்லை எனவும் ஆள்பதிவு ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதற்கிணங்க, கொழும்பு, காலி, குருநாகல், நுவரெலியா, வவுனியா, மட்டக்களப்பு ஆகிய மாவட்ட அலுவலகங்களை இன்று திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆள்பதிவு ஆணையாளர் நாயகம் பிரதீப் சபுதந்தி தெரிவித்துள்ளார்.

இதனிடையே, பரீட்சைக்குத் தோற்றவுள்ள பாடசாலை மற்றும் தனியார் விண்ணப்பதாரர்களுக்கான பரீட்சை அனுமதிப்பத்திரம் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பரீட்சை திணைக்களம் தெரிவித்தது.

கல்வி பொது தராதர சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் 06 ஆம் திகதி ஆரம்பமாகி 15 ஆம் திகதி நிறைவடையவுள்ளது.



# மருத்துவ பீட மாணவர்களின் ஆர்ப்பட்டத்தை கலைக்க பொலிஸார் நீர்த்தாரைப் பிரயோகம்

மருத்துவ பீட மாணவர்கள் குழுவினால் கொழும்பில் நேற்று முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்புநடவடிக்கையின் மீது பொலிஸார் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்டனர்.

கொழும்பு விஹாரமகாதேவி பூங்காவிற்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் ஆரம்பமானது.

சுதந்திர சுகாதார பட்டப்படிப்பினை பணத்திற்காக விற்பனை செய்யும் அரசாங்கத்தின் சூழ்ச்சியை உடனடியாக நிறுத்துமாறு இந்த ஆர்ப்பாட்டத்தின் போது வலியுறுத்தப்பட்டது.

விஹாரமாதேவி பூங்காவிற்கு அருகில் எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுத்த போது, அதனைத் தடுத்து நிறுத்தும் வகையில் பொலிஸார் அறிவித்தல் விடுத்தனர்.

எனினும், பொலிஸாரின் அறிவிப்பையும் பொருட்படுத்தாது மாணவர்கள் எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

நீர்த் தாரைப் பிரயோகத்தை அடுத்து மாணவ செயற்பாட்டாளர்கள், அங்கிருந்தவர்களுடன் உரையாடிய தன் பின்னர் கலைந்து சென்றனர்.

# குற்றவியல் விசாரணைப் பிரிவினர் மைத்திரியிடம் வாக்குமூலம் பதிவு

வாக்குமூலம் வழங்குவதற்காக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று குற்றவியல் விசாரணை திணைக்களத்தில் ஆஜரானார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் அண்மையில் வெளியிட்ட கருத்துக் குறித்து வாக்குமூலம் வழங்குவதற்காகவே அவர் திணைக்களத்தில் ஆஜராகியிருந்தார்.

நேற்று காலை 10 மணியளவில் திணைக்களத்திற்கு சென்ற முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சுமார் 02 மணித்தியாலங்கள் வாக்குமூலம் பதிவு செய்தார் என குற்றவியல் விசாரணை திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் வெளியிட்ட கருத்து குறித்து இதற்கு முன்னரும் அவர் குற்றவியல் விசாரணை திணைக்களத்தில் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.





# கடல் கொந்தளிப்பாகக் காணப்படும் மீனவர்களுக்கு எச்சரிக்கை அறிவிப்பு

கற்பிட்டி முதல் கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடல் கொந்தளிப்பாக இருக் கும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

இதனால், மேற்படி கடற்பிரதேசங்களில் கடலலைகள் 2.5 மீட்டர் முதல் 3 மீட்டர் வரை உயரக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கற்பிட்டியிலிருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக மாத்தறை வரையான பகுதிகளில் கடலலைகள் கரைக்கு வரக்கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

கற்பிட்டியில் இருந்து கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடலுக்கு அப்பாற்பட்ட கடற்பிராந்தியங்களில் அவ்வப்போது கடல் கொந்தளிப்பாகக் காணப்படுவதால், அப்பகுதிகளில் கடற்றொழிலில் ஈடுபடும் மீனவர்கள் அவதானமாகச் செயற்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# யாழ்.மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன் இன்று மணிவிழாக் காணுகின்றார்

**வீரகத்தி தனபாலசிங்கம்**



சிலரைப் பதவிகள் பெருமைப் படுத்துகின்றன. வேறு சிலர் பதவிகளைப் பெருமைப்படுத்துகிறார்கள். இதில் நிச்சயமாக இரண்டாவது வகையான ஆளுமையாகவே நான் வைத்தியக்கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரனைப் பார்க்கிறேன்.

மிகவும் இளம் வயதில் இலங்கை சுகாதாரத் துறையில் பல உயர்பதவிகளை வகித்து அளப்பரிய சேவையைச் செய்துவரும் அவர் இன்று தனது 60 வது அகவையில் பிரவேசிக்கிறார்.

வடமராட்சியின் கரவெட்டி காலங்காலமாக பல்வேறு துறைகளிலும் தலைசிறந்த ஆளுமைகளைத் தோற்று வித்த பாரம்பரியத்தைக் கொண்ட மண். தமிழ் மண்ணில் முதன்முதலான கம்யூனிஸ்ட் நாடாளுமன்ற உறுப்பினர் பொன். கந்தையா, தமிழர் விடுதலை கூட்டணியின் முன்னாள் தலைவர் எம். சிவசிதம்பரம் தொடக்கம் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி என்று இந்த ஆளுமைகளின் பட்டியல் நீண்டுகொண்டே போகும். அதை விவரிக்க இங்கும் இடம் போதாது.

மணிவிழாக்காணும் கேதீஸ்வரன் இன்றைய காலகட்டத்தில் கரவெட்டியை அடையாளப்படுத்தும் பெருமைக்குரிய ஆளுமைகளில் ஒருவராக விளங்குவது எம்மெல்லோருக்கும் பேருவகை.

சோவியத் ரஷ்யாவில் தனது மருத்துவக் கல்வியைப் பெற்ற கேதீஸ்வரன் சமுதாய மருத்துவத்தில் முதுமாணிப் பட்டத்தை கொழும்பு பல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொண்டார்.

தனது 25 வது வயதில் கேதீஸ்வரன் மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையின் வைத்தியப் பொறுப்பதிகாரியாக முதல் நியமனத்தைப் பெற்றார்.

அதற்கு பிறகு வவுனியா பொது வைத்தியசாலை வைத்திய அதிகாரி, வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி, வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வடமாகாண பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப் பாளர் பதவிகளை வகித்து தற்போது யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக சேவை யாற்றி வருகிறார்.

சுகாதார சேவையில் இளவயதில் இருந்தே முக்கியமான பதவிகளை வகித்து வளமான அனுப வத்தைக் கொண்டிருக்கும் கேதீஸ்வரன் இன்று இலங் கையில் உள்ள முக்கியமான சுகாதார சேவை அதி காரிகளில் ஒருவராக விளங்குகிறார்.

தனது நிருவாகத்தின் கீழ் இருக்கும் பிராந்தியங்களின் சுகாதார சேவைகளின் சிறப்புக்காக அரசாங்கத்தின் கௌரவத்தையும் அவர் பல தடவைகள் பெற்றிருக்கிறார்.

கேதீஸ்வரனின் எளிமையும் நயநாகரிகமான அணுகுமுறையும் மக்களுடனான தொடர்பாடல்களில் அவரின் கண்ணியமான நடத்தையுமே அவரை இன்றைய உயர்ந்த நிலைக்கு கொண்டுவந்தன என்பதில் சந்தேகமில்லை.

கேதீஸ்வரன் அதிர்ந்து பேசியமையை எவரும் கண்டிருப்பார்கள் என்று நான் நம்பவில்லை. சுகாதார சேவை அதிகாரிகளுக்கு மாத்திரமல்லர், சகல துறை களையும் சேர்ந்த உயரதிகாரிகளுக்கும் இருக்கவேண்டிய சகல உயர் பண்புகளையும் உருவகப்படுத்தும் சிறந்த ஓர் ஆளுமையாக எம்மத்தியில் அவர் பிரகாசிக்கிறார்.

ஒரு பத்திரிகையாளன் என்ற வகையில் கேதீஸ்வரன் செய்துவந்திருக்கும் அர்ப்பணிப்புச் சிந்தையுடனான சேவைகளை நான் அறிவேன். வவுனியாவில் அவர் பல வருடங்கள் சேவைசெய்து அந்த பிராந்திய மக்களினதும் பிரதிநிதிகளினதும் பெருமதிப்புக்குரியவராக திகழ்ந்த மாண்பை காலஞ்சென்ற மூத்த பத்திரிகை யாளரான எனது நெருங்கிய வவுனியா பொன்னையா மாணிக்கவாசகம் என்னிடம் பல தடவைகள் கூறியி ருக்கிறார்.

கேதீஸ்வரின் நிருவாகத்தின் கீழ் அண்மைக்காலமாக யாழ்ப்பாணம்சுகாதாரசேவையில்முன்னெடுக்கப்படுகின்ற மேம்பாட்டு நடவடிக்கைகள் அவருடைய நிருவாகத் திறமைக்குச் சான்று பகர்கின்றன.

கரவெட்டி ஆதார வைத்தியசாலையை இன்று பல்வேறு வசதிகளையும் கொண்டதாக மேம்படுத்தியதில் கேதீஸ்வரன் செய்த பங்களிப்பு அவரின் அர்ப்பணிப்புச் சிந்தையுடனான சேவையை நாம் தெளிவாகத் தெரிந்து கொள்வதற்கு எமக்கு நெருக்கமாக முன்னால் உள்ள ஒரு சான்று மாத்திரமே.

கேதீஸ்வரனின் மணிவிழாவைக் கொண்டாடுவதற்கு கரவை மக்களும் புலம்பெயர்ந்த உறவுகளும் இன்று விமரிசையான விழாவொன்றை ஏற்பாடு செய்தி ருக்கிறார்கள்.

இன்று காலை நெல்லியடி முருகமூர்த்தி ஆலய மண்டபத்தில் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியின் முன்னாள் அதிபர் நடராஜா தெய்வேந்திரராஜா தலைமையில் நடைபெறும் விழாவில் மருத்துவத்துறை மற்றும் கல்வித்துறை உட்பட பல்வேறு துறைகளையும் சார்ந்த முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு கேதீஸ்வரனை சொந்த கரவை மக்கள் முன்னிலையில் கௌரவிக்கிறார்கள் என்பது அளவிலா மகிழ்ச்சியையும் பெருமையையும் தருகிறது.

அவரின் சேவைகளையும் சாதனைகளையும் விளக்கும் 'ஆற்றலாளன்' என்று மகுடத்திலான மணிவிழா மலர் ஒன்று இன்றைய விழாவில் வெளியிட்டு வைக்கப்படுகிறது. மணிவிழாவுக்கான விரிவான ஏற்பாடுகளை செய்வதில் பல வாரங்களாக முன்னின்று உழைத்த கரவை திரு இருதயக் கல்லூரியின் முன்னாள் அதிபர் இளையதம்பி இராகவனும் அவரைச் சார்ந்த குழுவினரும் பெரும் பாராட்டுக்குரியவர்கள்.

கேதீஸ்வரன் ஆரோக்கியத்துடன் நீடூழி வாழ்ந்து குறிப்பாக இலங்கை சுகாதார சேவைக்கும் பொதுவில் மக்களுக்கும் தொடர்ந்து பயனுறுதியுடைய சேவையைத் திறம்படச்செய்ய கரவை மக்களுடன் சேர்ந்து வாழ்த்து வதில் பெருமையடைகிறேன்.

# மட்டக்களப்பில் ஆலயங்களில் திருடிய 2 இளைஞர்கள் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள கல்லடி டச்பார், மஞ்சம் தொடுவாய் பிரதேசத்திலுள்ள இரு ஆலயங்களில் செம்பிலான குத்து விளக்குகள் மற்றும் மின்சாரசபையின் டிரான்ஸ்போமர்களில் உள்ள செம்பு கம்பிகளை திருடிவந்த 26 வயதுடைய இருவரை நேற்று முன்தினம் வியா ழக்கிழமை இரவு தாங்கள் கைது செய்துள்ளனர் என காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜி.கஜநாயக்கா தெரிவித்தார்.

டச்பார் வீதியிலுள்ள சிந்தாமணி பிள்ளையார் ஆலையம் மற்றும் மஞ்சம் தொடுவாயிலுள்ள வீரபத்திரர் ஆலையங்கள் பூட்டியிருந்த நிலையில் கதவுகளை உடைத்து அங்கிருந்த செம்பிலான குத்துவிளக்குகள் மற்றும் மின்சாரசபையின் டிரான்போமர்களிலுள்ள செம்பு கம்பிகள் திருட்டுப் போயுள்ளமை தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இது தொடர்பாக பெரும் குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தலைமையில் விசாரணையையடுத்து கல்லடி தரிசனம் வீதி, நொச்சிமுனையை சேர்ந்த 26 வயதுடைய இளைஞர் ஒருவரையும் மட்டு நகர் மத்தியஸ்தர் வீதியைச் சேர்ந்த 26 வயதுடைய ஒருவரையும் வியாழனன்று கைது செய்து திருடப்பட்ட பொருட்களையும் மீட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் விசாரணையின் பின்னர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரி வித்தார்.


38 ஆவது ஆண்டு நினைவுகள்

தமிழ் தேசிய ஒற்றுமை வாரம் (சித்திரை 29 - வைகாசி 06)



தலைவர் சிறி சபாரத்தினம்

தூய சிந்தனைகளையும்
நல்ல எண்ணங்களையும்
விடுதலைக்காக விட்டுச்சென்ற
வரலாற்று நாயகன்
இலட்சியக் கனவுகளுடன்
இறுதிவரை போராடி
ஈழ விடுதலையை உரமூட்டி நேசித்த
ஒப்பற்ற எம் தலைவன் !!

1986 சித்திரைத் திங்கள் 29 தொடக்கம் வைகாசித் திங்கள் 06 வரை விடுதலைக் களத்தில் காவியமான எமது தலைவர் சிறி சபாரத்தினம் அவர்களுக்கும் ஏனைய ரெலோ போராளிகளுக்கும், பொதுமக்களுக்கும் மீண்டும் மீண்டும் எமது வீர வணக்கங்களை செலுத்துகின்றோம்.

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (TELO)

இணையம் : www.telo.org




# அம்பாறையில் இரு பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்து

# பாடசாலை மாணவர்கள் 25 பேர் உட்பட 33 பேர் படுகாயம்

**(கனகராசா சரவணன்,
பாறுக் ஷிஹான்)**

அம்பாறை அக்கரைப்பற்று பிரதான வீதியான கல்லோயா ஈ.சி.சி சந்தியில் – கல்ஓயா பாலத்திற்கு அருகில் – இரு பஸ்கள் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் 25 பாடசாலை மாணவர்கள் உட்பட 33 பேர் படுகாயமடைந்த நிலையில் அம்பாறை ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என அம்பாறை தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அக்கரைப்பற்றில் இருந்து அம்பாறை நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்து சபை பஸ்ஸும் அம்பாறையில் இருந்து தமண பிரதேசத்திற்கு பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற தனியார் பஸ்ஸுமே இவ்வாறு மோதி விபத்துக்குள்ளாகின.

இதில் பாடசாலை மாணவர்கள் 25 பேர் உட்பட 33 பேர் படுகாயடைந்தனர். அவர்களை பொலிஸார், பொதுமக்கள் ஒன்றிணைந்து மீட்டு உடனடியாக அம்பாறை ஆதார வைத்தியசாலையில் சேர்த்தனர்.

இச் சம்பவத்தையடுத்து அந்த பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இரு பஸ்களும் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை அம்பாறை தலைமையக பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.













# தமிழர்களுக்கு அநுர தீர்வைத் தரார்; தமிழ் மக்களைத் தீர்த்துக் கட்டுவார்!

## எச்சரிக்கின்றார் ஈ.பி.டி.பியின் ஊடக பேச்சாளர் சிறீரங்கேஸ்வரன்

இணைந்திருந்த வடக்கு – கிழக்கு மாகாணத்தை உயர்நீதிமன்றம் சென்று பிரித்த ஜே.வி.பி. தமிழ் மக்களின் அதிகாரத்துக்கான நியாயமான உரிமைகளை எவ்வாறு தரும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்றையதினம் ஊடக சந்திப்பை மேற்கொண்ட அவர் இவ்வாறு கேட்டார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:–

பிரபல ஆங்கில ஊடகமான சண்டே ரைம்ஸ் ஊடகத்திற்கு ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸநாயக்க நாட்டில் பல ஆண்டுகளாக ஆட்சியாளர்களால் தொடர்ந்து மறுக்கப்பட்டுவந்த தமிழ் மக்களின் அதிகாரத்துக்கான நியாயமான உரிமைகளை உறுதி செய்வதோடு இலங்கையில் இனப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை பெற்றுக்கொடுத்து தேசத்தை மீண்டும் கட்டியெழுப்பத் தன்னால் முடியும் என கூறியுள்ளார்.

அதேநேரம் 2019 ஆம் ஆண்டு தங்களது கொள்கை குறித்த ஆவணத்திலும் 13 ஆவது திருத்தம் மற்றும் மாகாணசபைகள் குறித்து தமது நிலைப்பாட்டை வெளியிட்டிருப்பதாகவும் சூசகமாகக் கூறியுள்ளார்.

இந்திய – இலங்கை ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு இணைந்த வடக்கு – கிழக்கு மாகாணத்தை தமிழர்களின் ஒரு நிலத் தொடருள்ள தாயக பூமியாக தமிழ் மக்கள் வாழ்வதை கூட விரும்பாத ஜே.வி.பி. அதற்கு எதிராக உயர்நீதிமன்றத்தை நாடி வடக்கு – கிழக்கைத் தனித்தனி மாகாணங்களாகப் பிரித்தது வரலாறு.

குறைந்தபட்சமாக வடக்கு – கிழக்கு மாகாணத்திக் தமிழர்கள் ஒன்றிணைந்து வாழ்வதைக் கூட விரும்பாத இனவாத சிந்தனையுடன் செயற்பட்ட ஜே.வி.பி. தலைவர் இப்போது ஜனாதிபதி தேர்தல் நடைபெறக் கூடும் என்ற சூழலில் தமிழ் மக்களுக்கான நியாயமான உரிமைகளை உறுதி செய்வதாக அந்த ஊடகத்திற்குக் கூறியுள்ளார்.

இதிலிருந்து பட்டவர்த்தனமாக புலப்படுவது தேர்தலை இலக்குவைத்து சமீபத்தில் புலம்பெயர் தேசம் சென்றிருந்த ஜே.வி.பி. தலைவர் அங்குள்ள அமைப்புகளின் கருத்துக்களை அறிந்து, தமிழ் மக்களின் வாக்கை அபகரிக்கின்ற யுக்தியாக இவ்வாறான ஒரு கருத்தை சொல்ல முனைந்துள்ளார் என்பதே.

உண்மையில் தமிழ் மக்களின் அரசியல் உரிமை மற்றும் தீர்வுகளை முன்னெடுக்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் ஜே.வி.பி. எவ்வாறான முட்டுக்கட்டைகளை அரசாங்கங்களுக்குஒ போட்டிருந்தது என்பதை தமிழ் மக்கள் கண்ணூடாகப் பார்த்துள்ளனர்.




கடந்த ஏப்ரல் 04 ஆம் திகதி யாழ்ப்பாணம் வலம்புரி விருந்தினர் விடுதியில் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துரைத்த ஜே.வி.பி. தலைவர் நான் சமஷ்டியைத் தருவேன் என்றோ, 13 ஆவது திருத்தத்தை தருவேன் என்றோ இங்கு பேரம் பேச வரவில்லை என இனவாத மமதை கலந்த போக்குடன் கருத்துக் கூறியிருந்தார்.

எனவே குறைந்தபட்சமாக உள்ள மாகாண முறைமையை கூட ஏற்றுக் கொள்ளாத ஜே.வி.பி. தமிழ் மக்களுக்கு எவ்வாறு நியாயமான உரிமைகளை வழங்கும்?

இனவாதக் கொள்கையை வகுத்து நீண்டகாலமாக தமது அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்துவரும் ஜே.வி.பியினர், அண்மைய காலத்தில் தமிழ் மக்கள் மீது கரிசனை கொள்வது போன்று ஊடக செய்திகளை வெளியிட்டு வருவதைப் பார்த்தால் தமிழ் மக்களுக்கான தீர்வை அல்ல, தமிழ் மக்களின் இருப்பையே இல்லாது செய்யும் வகையில் அவர்கள் நடந்து கொள்வர் என்ற சந்தேகமே எழுகின்றது.

இதே சமயம் நிலங்களுக்காக மக்களை போராடுகின்ற நிலைமைக்கு தள்ளியவர்கள் கூட்டமைப்பினரே

என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது.

நல்லாட்சி அரசில் தனியார் நிலங்களை சுவீகரிக்கும் பிரேரணைக்கு நாடாளுமன்றில் முழுமையாக ஆதரவளித்தது இலங்கைத் தமிழரசுக் கட்சி. தற்போது தனது மேதினக் கூட்டத்தில் நாங்கள் தொழிலாளர்களுக்காக மட்டுமல்ல நிலத்தை பாதுகாப்பதற்காகவும் கூடியிருக்கின்றோம் என அக்கட்சியின் தலைவர் தலைவர் மாவை சேனாதிராசா அப்பட்டமாக பொய்யுரைத்துள்ளார்.

நல்லாட்சி என்ற அரசில் – மைத்திரி அரசாங்கத்தில் – துறைசார் அமைச்சின் அமைச்சராக இருந்த இன்றைய எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தொல்பொருள் திணைக்களத்தினூடாக தமிழர் தாயக பூர்வீக பிரதேசங்களை மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக சுவீகரிப்புக்களை மேற்கொள்வதற்கு நாடாளுமன்றத்தில் பிரேரணையைச் சமர்ப்பித்து நிறைவேற்றியபோது அதற்கு ஆதரவாக தமிழரசுக் கட்சியின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த தமிழ் தேசிய கூட்டமைப்பு வாக்களித்தது.

அதன்காரணமாக வடக்கு கிழக்கில் வனஜீவராசிகள் மற்றும் வனவளத் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம் போன்றவை பல தனியார் நிலங்களைத் தம்வசப்படுத்திக் கொண்டன.

அன்றைய காலத்தில் அரசுடன் தேனிலவில் மிதந்த இவர்கள் தமிழர்களுக்கும் தேசத்திற்கும் ஆபத்து ஏற்பட்டிருந்ததை அறியவில்லையா? தற்போது தாம் தொழிலாளர்களுக்கு மட்டுமல்ல, நிலத்தையும் பாதுகாக்க கூடியிருக்கின்றோம் என நீலிக்கண்ணீர் வடிக்கின்றனர்.

இன்று இவ்வாறன அரச திணைக்களங்களால் முல்லைத்தீவு கரியவயல் பகுதியில் 130 பேருக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, அவர்கள் தமது வாழ்விடங்களையும் வயல் நிலங்களையும் விவசாய பூமியையும் மீட்பதற்காக நீதிமன்றத்திற்கு அலைந்த வண்ணம் உள்ளனர். இவற்றை எல்லாம் தோற்றுவித்தவர்கள் கூட்டமைப்பினரே அன்றி வேறு யாரும் அல்லர்.

அன்று கோடரிக்காம்பாக செயற்பட்ட கூட்டமைப்பு இன்று சிதைவடைந்துள்ள நிலையில் இவ்வாறு முணுமுணுக்கத் தொடங்கியுள்ளது. அது மட்டுமல்ல, எமது மக்கள் நிலங்களுக்காக போராடுகின்ற நிலைமையை உருவாக்கியவர்கள் கூட்டமைப்பினரே.– என்றார் அவர்.





# வெள்ளி தோறும் கடற்கரையோரங்களில் கழிவகற்றும் கல்முனைக் கடற்படையினர்

(பாறுக் ஷிஹான்)

கல்முனை கடற்படையினரால் கடற்கரையோரங்களில் உள்ள பிளாஸ்டிக் மற்றும் கண்ணாடிப் போத்தல்கள், டின்வகைக் கழிவுகள் அகற்ற நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது

அம்பாறை மாவட்ட கடற்கரையோரங்களில் அடைமழை காரணமாக பிளாஸ்டிக் மற்றும் இதர கண்ணாடிப் போத்தல் கழிவுகள் பரவலாக காணப்படுவது குறித்து அண்மைக்காலமாக சமூக ஊடகங்களில் தகவல்கள் வெளியாகி இருந்தன.

இதனைத் தொடர்ந்து பல்வேறு தரப்பினரும் சிரமதானம் என்ற பெயரில் தத்தமது செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தனர்.

கல்முனை பகுதியில் அமைந்துள்ள கடற்படை முகாம் படையினர் வெள்ளிக்கிழமை தோறும் இவ்வாறு கடற்கரைப் பகுதியில் தேங்கி காணப்படுகின்ற பிளாஸ்டிக் வகைக் கழிவுகள், கண்ணாடிப் போத்தல் வகைகள், டின் வகை கழிவுகளை உரப்பையில் சேகரித்து குறிப்பிட்ட பகுதிகளை துப்பரவு செய்து வருகின்றனர்.

குறிப்பாக அடை மழை காரணமாக ஏற்பட்ட வெள்ள நீர் வடிந்தோடுவதற்காக தற்காலிகமான கால்வாய்கள் கடலை நோக்கிக் கடந்த காலங்களில் வெட்டப்பட்ட நிலையில் இவ்வாறான கழிவுகள் அதிகளவாக கடற்கரையில் கரை ஒதுங்கி நிறைந்து காணப்படுகின்றன.

அம்பாறை மாவட்டத்தில் பெரிய நீலாவணை, பாண்டிருப்பு, கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு, மாளிகைக் காடு உள்ளிட்ட பகுதிகளில் இவ்வாறான கழிவு அடையாளங்கள் தென்பட்டுள்ளன.

இவ்வாறான கழிவு பரவலானது. கரையோர மீனவர்களது மீன்பிடித் தொழிலுக்கு பெரும் சிரமங்களை கொடுப்பதுடன் வலைகளிலும் சிக்கி பல்வேறு சிரமங்களை மீனவ சமூகத்துக்குக் கொடுத்து வருகின்றது.

இதனை அடுத்து வெளிளிக்கிழமை தோறும் படிப்படியாக கனரக வாகனத்தின் உதவிகளுடன் கடற்படையினர் இவ்வாறான நடவடிக்கையை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.









# இலங்கை உயர் தொழில்நுட்ப கல்லூரியின் திருமலை வளாக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

## முக்கிய கற்கைநெறி நிறுத்தப்படுவதையை ஆட்சேபித்து

**(அப்துல்சலாம் யாசீம்)**

இலங்கை உயர் தொழில்நுட்ப கல்லூரி திருகோணமலை வளாகத்தைச் சேர்ந்த மாணவர்கள் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நிரந்தர விரிவுரையாளர்கள் பற்றாக் குறை காரணமாக தகவல் தொழில் நுட்பத்தில் உயர் டிப்ளோமா (HNDIT) கற்கைநெறி இடைநிறுத்தப்படவுள்ள மையை ஆட்சேபித்தே இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கன்னியா உயர் தொழில்நுட்ப கல் லூரியில் இருந்து நடைப்பவனியாக அனுராதபுர சந்தி வரைக்கும் பதா கைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பியவாறு வந்து அவர்கள் ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன் அந்த மாணவர்களின் ஊடகங்களுக்கு ஊடக அறிக்கையொன் றையும் வெளியிட்டனர்.

அந்த ஊடக அறிக்கையில் கூறப்பட் டிருப்பவை வருமாறு:-

உயர் கல்வி அமைச்சின் கீழ் இயங்கு கின்ற இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனமானது (Sri Lanka Institute of Advanced Technological Education - SLIATE), நாடளாவிய ரீதியில் 12 Advanced Technology Institute - ATI நிறு வனங்களை கொண்டது. அதில் திரு கோணமலை மாவட்டத்தில் அமைந் துள்ள ATI கல்வி நிறுவனமானது Higher National Diploma in Accountancy (HNDA), Higher National Diploma in English (HNDE) , Higher National Diploma in Information Technology (HNDIT), Higher National Diploma in Tourism and Hospitality Management (HNDTHM) ஆகிய நான்கு கற்கைநெறிகளையும் வழங்கி வரு கிறது.

இவற்றுள் ஏனைய கற்கைநெறிக ளைக் காட்டிலும் குறிப்பாக HNDIT கற்கைநெறிக்காக ஏராளமான விண் ணப்பங்கள் கிடைக்கப்பெறுவதுடன் வருடாந்தம் நூறுக்கு அண்மித்த மாண வர்கள் உள்ளீர்க்கப்படுகிறார்கள். பாடசாலையை பூர்த்தி செய்த பின்பு உயர் கல்வியை தொடர எதிர்பார்த்திருப் போருக்கான பல்கலைக்கழகங்களுக்கு நிகரான சிறந்த தெரிவாக இந்த SLIATE - ATI நிறுவனம் காணப்படுகின்றது.

இன்றைய 21ஆம் நூற்றாண்டிலே உலகெங்கும் பெருமளவில் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தியுள்ள தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறையில் (ICT Sector) திருகோணமலை மாண வர்கள் தங்களுடைய எதிர்காலத்தை வடிவமைத்துக் கொள்வதற்கும் அங்கீ காரம் வாய்ந்த கல்வித் தகுதியொன்றை (Higher National Diploma) இலவசமாக அரச நிறுவகமொன்றில் பெற்றுக்கொள் வதற்கும் நல்லதொரு வாய்ப்பாக விளங் குகின்ற இந்த ATI - Trincomalee நிறுவ னத்தில் HNDIT கற்கைநெறியானது நிரந்தர விரிவுரையாளர்கள் பற்றாக் குறை காரணமாக இடைநிறுத்தப்பட வுள்ளமையானது திருகோணமலை சமூகத்தின் கல்விப்புலத்திலே பாரிய பின்னடைவை ஏற்படுத்தும் என்பது உறுதி.

ATI - Trincomalee நிறுவகத்திலே HNDIT கற்கைநெறியை பூர்த்தி செய்த மாணவர்கள் பலர் தற்போது IT துறையில் பல்வேறு நிறுவனங்களில் நல்ல தொழில் வாய்ப்புக்களை பெற்று பிரகாசித்துக் கொண்டிருப்பதும் குறிப் பிடத்தக்கது. இவ்வாறிருக்க திருகோ ணமலை வாழ் இளம் சமூகத்தினை துறைசார்ந்து வளப்படுத்தும் பயனுறு திமிகு இக்கற்கைநெறியானது இடை நிறுத்தப்படுவது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டியதும் உயர் மட்டங் களுக்கு இவ்விடயத்தை எடுத்துச் சென்று உரிய தீர்வொன்றினை பெற்றுக் கொடுத்து HNDIT கற்கைநெறியானது தொடர்ந்து திறம்பட வழங்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டியதும் திருகோ ணமலை மீது உண்மையிலே கரிசனை கொண்ட குடிமகன் ஒவ்வொருவரினதும் பொறுப்பாகும். - என்று தெரிவிக்கப்பட் டுள்ளது.








# ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்று யாழ்ப்பாணத்தில் போராட்டம்

சர்வதேச ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு, யாழ்ப்பாணத்தில் யாழ். ஊடக அமையத்தின் முன்பாக நேற்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணியளவில் யாழ். ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர் போராட்டத்தில் கலந்து கொண்டு, படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரி கோஷங்களை எழுப்பினர். அத்துடன், ஊடக நிறுவனங்கள் மீது மேற்கொள்ளப்பட தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் கோரினர்.

அத்துடன், அரச அதிகாரிகள், அரச பலங்களை பிரயோகித்து ஊடகவியலாளர்களை நெருக்கடிக்கு உள்ளாக்கி, அச்சுறுத்துவது உள்ளிட்ட செயற்பாடுகளை நிறுத்த வேண்டும் எனவும், ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண் டும் எனவும் போராட்டத்தில் ஈடுபட்ட ஊடகவியலாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.






CLICK HERE VIDEO








# இன்றைய ராசி பலன்கள் - 04.05.2024

## மேஷம்

இன்று விருப்பமான பலன்கள் கிடைக்காது. ஆன்மீக நோக்கத்திற்கான பயணம் ஒன்றை மேற்கொள்ள நேரும். சில கடினமான சூழ்நிலைகளை சந்திக்க நேரும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியிடத்தில் நீங்கள் கூடுதல் பொறுப்புகளை ஏற்க நேரலாம்.

குடும்பப் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். அதனை நீக்கி பரஸ்பரம் ஒருவரையொருவர் புரிந்துகொள்ள வேண்டும்.

பயணத்தின்போது பண இழப்புகள் நேரலாம். பணத்தை கவனமாகப் பாதுகாக்க வேண்டும்.உங்கள் துணையின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

## ரிஷபம்

இன்று உற்சாகமான நாளாக இருக்கும். உங்களிடம் ஆர்வம், விருப்பம் வெற்றி பெற வேண்டும் என்ற வேட்கை காணப்படும். இன்று உங்கள் நீண்ட நாள் ஆசையை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.

பணியிடத்தில் வளர்ச்சி காணப்படுகின்றது. புதிய வாய்ப்புகள் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள துணையுடன் பக்குவமான புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வீர்கள். குடும்ப வளர்ச்சி குறித்து உங்கள் துணையுடன் கலந்தாலோசிபீர்கள்.

இன்று பண வரவு சிறப்பாக இருக்கும். இதனை நீங்கள் பயனுள்ள நோக்கங்களுக்கு பயன்படுத்திக் கொள்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

## மிதுனம்

உங்கள் தகவல் பரிமாற்ற திறமை காரணமாக இன்று நீங்கள் வெற்றி பெறுவீர்கள். ஆன்மீக சொற்பொழிவுகளை கேட்பது பக்திப் பாடல்களை கேட்பது போன்ற விஷயங்களில் ஈடுபடுவீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் கடின உழைப்புக்கு நல்ல பலன் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும்.

உங்கள துணையுடன் அன்பும் அனுசரனையுமாக நடந்து கொள்வீர்கள். குடும்பப் பிரச்சினை பற்றி மனம் திறந்து பேசுவீர்கள். அதனால் திருப்தியாக உணர்வீர்கள்.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு தேவையான பணம் இன்று காணப்படுகின்றது.

## கடகம்

இன்று ஆன்மீக செயல்களில் ஈடுபடுவீர்கள். பக்திப் பாடல்கள் கேட்டு மன ஆறுதல் பெறுவீர்கள். இதனால் நீங்கள் மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் இருப்பீர்கள்.

உங்களின் பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. உங்கள் கடின உழைப்பிற்கும் செயல்திறனுக்கும் அங்கீகாரம் கிடைக்காதது போல் உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் உங்களின் மாறுபட்ட மனநிலையைக் காண்பிப்பீர்கள். இது உறவின் மகிழ்ச்சியை பாதிக்கும்.

இன்று பணப்பற்றாக்குறை உங்களுக்கு கவலையை அளிக்கும். இன்று காணப்படும் செலவினங்களை சமாளிப்பதை நீங்கள் கடினமாக உணர்வீர்கள்.

இன்று பதற்றம் காணப்படும். ஆரோக்கியமாய் இருக்க தியானம் மேற்கொள்வது சிறந்தது.

## சிம்மம்

இன்று விருப்பமான பலன்கள் கிடைப்பது அரிது. உங்கள் மனதை அமைதியாக வைத்துக்கொள்ள வேண்டும். நடந்து செல்லும் போதும் அல்லது பயணத்தின் போதும் காயம் ஏற்படாமல் இருக்க கவனமாக இருக்க வேண்டும்.

உங்களின் பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. உங்கள் கடின உழைப்பிற்கும் செயல்திறனுக்கும் அங்கீகாரம் கிடைக்காதது போல் உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச தயங்குவீர்கள். அவரால் புறக்கணிக்கப் படுவதாக திடமாக நம்புவீர்கள்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

## கன்னி

இன்று மகிழ்ச்சியாக இருக்கும் சூழ்நிலை காணப்படும். உங்கள் எண்ணங்களிலும் செயல்களிலும் அது பிரதிபலிக்கும். தியானம் மேற்கொள்வதன் மூலம் மன ஆறுதல் கிடைக்கும்.

இன்று புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். ஆது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் பணிகளை திறமையாக செய்வதற்கான சூழ்நிலை காணப்படும்.

உங்கள் துணையிடம் அன்பாக நேர்மையாக பழகுவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று நிதிவளர்ச்சி சிறப்பாக இருக்கும். நீங்கள் சேமிப்பு திட்டங்களில் கலந்து கொள்வீர்கள். இது உங்கள் நிதிநிலையை மேம்படுத்தும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். மன தைரியமும் உறுதியும் நிறைந்து காணப்படும்.

## துலாம்

இன்று உங்கள் முன்னேற்றத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். உங்கள் பாதையில் நீங்கள் சில தடைகளை சந்திக்க நேரும். மாறும் சூழ்நிலைகளுக்கேற்ப உங்களை மாற்றிக் கொண்டால் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

உங்கள் சக பணியாளர்களுடன் தகவல் பரிமாற்ற பிரச்சினைகள் காணப்படும். இது பணியிடச் சூழலை பாதிக்கும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும். அமைதியான அணுகுமுறை மூலம் நல்லுறவை வளர்க்க முடியும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். நீங்கள் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகள் அதிகமாக காணப்படும்.

## விருச்சிகம்

இன்று உங்கள் செயல்களை நேர்மையாகவும் நாணயமாகவும் செய்ய வேண்டும். கொள்கைகளில் தளராமல் நடுநிலையோடு இருக்க வேண்டும். இல்லையெனில் உங்களுக்கெதிரான சூழ்நிலை ஏற்படலாம். இன்று அமைதியாக இருப்பது சிறந்தது.

உங்கள் பணிகளை திறமையுடன் கையாளும் உறுதி குறைந்து காணப்படும். சக பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்காது. உங்கள் செயல்திறனுக்கு மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

உங்கள் துணையிடம் நீங்கள் இன்று வன்மையாக நடந்து கொள்ள நேரலாம்.

இன்று பண வரவு காணப்படாது. நிதி வளங்கள் வற்றிக் காணப்படும்.பொறுப்புகள் இருந்து கொண்டே இருப்பதன் காரணமாக வங்கியிருப்பு பராமரிப்பது கடினமாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 04.05.2024




இன்று உங்கள் செயல்களில் எச்சரிக்கையும் பொறுமையும் தேவை. இன்று சிலவிதமான இழப்புகளை சந்திக்க நேரலாம். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகள் நிலுவையில் இருக்கும். பணியில் தவறுகள் நேரலாம். பணிகளை தரமாக முடித்துக் கொடுக்க திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படலாம். வன்மையாக நடந்து கொள்ளலாம். எனவே மகிழ்ச்சியை தக்க வைக்க இத்தகைய நடத்தையை தவிர்த்தல் நல்லது.

அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக இன்று அதிகம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும். தேவையற்ற செலவுகளின் கவலையும் இன்று காணப் படும்.




இன்று அமைதி காணப்படும். இன்றைய நாளின் விளைவுகள் உங்களுக்கு திருப்தியை அளிக்கும். உங்களிடம் மன நிறைவு காணப்படும்.

நீங்கள் தன்னம்பிக்கையுடன் சிறப்பாக பணியாற்றுவீர்கள். உங்கள் பணி செய்யும் முறை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடன் அன்பாகவும் அனுசரணையாகவும் நடந்து கொள்வீர்கள். பரஸ்பர புரிந்துணர்வும் மகிழ்ச்சியும் காணப்படும்.

பயனுள்ள சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று உங்களிடம் காணப்படும் மன மகிழ்ச்சி காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் கடின உழைப்பு மூலம் இன்று வெற்றி கிடைக்கும். உங்கள் சுய முன்னேற்றத்தின் மூலம் நீங்கள் கடினமாக உழைத்து வெற்றியை அடையலாம். இன்று நீங்கள் உங்கள் இலக்குகளை அமைத்துக் கொண்டு அதற்கு முயற்சி செய்வீர்கள்.

பணிநிமித்தமான பயணம் காணப்படும். இது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் திருப்தியும் மகிழ்ச்சியும் ஏற்படும்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கும் சேமிப்பதற்கும் பணம் கிடைக்கும் அதிர்ஷ்டம் இன்று காணப்படுகின்றது.




உங்கள் அணுகுமுறையில் யதார்த்தமும் ஒழுங்குமுறையும் தேவை. பயணம் காணப்படுகின்றது. இசை விழாக்களில் பங்கு கொள்வதன் மூலம் உங்களுக்கு ஆறுதல் கிடைக் கும்.

உங்கள் பணிகளைக் கையாளும் போது மிகவும் கவனம் தேவை. உங்கள் பணிகளை திட்டமிட்டு செய்ய வேண்டும். அதன் மூலம் உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை திறம்பட ஆற்ற முடியும்.

உங்கள துணையுடன் பேசும் போது கவனமாக இருக்க வேண்டும். கவனமற்ற வார்த்தைகள் காரணமாக பாதிப்புகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பேசுவதற்கு முன் விளைவுகளை யோசித்து பேச வேண்டும்.





